**தலைப்பு 182 – வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றைக் கொண்டமைந்த 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் ஏற்பாடுகளின் பிரகாரம், சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின்கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11 (1) பிரிவு பிரகாரம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நிதிக் கூற்றுகள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய சாராம்ச அறிக்கை 2019 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதியில் பிரதான கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரிடம் வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தில் 11 (2) பிரிவு பிரகாரம், அமைச்சிற்கு ஏற்புடையதான வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 10 ஆவது பிரிவு பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையில் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து நிதிக் கூற்றுகளில் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுகள் தொடர்பாக பிரதான கணக்கு கொடுக்கும் உத்தியோகத்திரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கவும் சரியாகவும் நியாயமாகவும் நிதிக் கூற்றுகளை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றறை தீர்மானித்தல் பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 38(1)(இ) உபபிரிவு பிரகாரம் அமைச்சின் நிதி நிருவாகத்திற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுகின்றது என்பதற்கு பிரதான கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தர் சான்றுப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அந்த முறைமையின் பயன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்து அதன்படி முறைமையை பயனுள்ளவாறு கொண்டுச் செல்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**1.4** நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- பொதுவாக நிதிக் கூற்றுகளை சமர்ப்பிக்கும்போது, நிதிக் கூற்றுகளில் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிருவாகத்தின் குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரை அறிவுறுத்தப்பட்டது.

**1.5** ஏனைய சட்டத்துடனான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆவது பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) கடந்த ஆண்டுக்காக நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் தேவை ஏற்படவில்லை என்பதால், மீளாய்விற்கான ஆண்டின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒழுங்கமைகின்றதென வெளிப்படுத்த இயலாதுள்ளது.

(ஆ) வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சினால் கடந்த ஆண்டுக்கு ஏற்புடையதாக நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் தேவை ஏற்படவில்லை என்பதால் நிதிக் கூற்றுகள் தொடர்பான பரிந்துரை சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6** நிதி கூற்றுகள் தொடர்பான கருத்துரைகள்

**1.6.1** நிதிக் கூற்றுகள் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை

2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கை பிரகாரம் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டியிருப்பினும், அத்தேவைகளுக்கு புறம்பாக செயலாற்றிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| நிதி செயலாற்றுகை கூற்றில் உள்ளடக்க-ப்பட்டுள்ள ரூபா. 443,209,027 எதிர்மறையான கட்டுநிதியின் மீதி, கட்டுநிதி சீராக்கல் கணக்குடன் ஒப்பிட்டு நிதிக் கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதி செயலாற்றுகை கூற்றில் காட்டப்படும், ஆண்டு இறுதி கட்டுநிதி மீதி மற்றும் கட்டுநிதி கணக்கின் மீதி என்பவற்றுக்-கிடையில் வேறுபாடு 2018 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆந் திகதிய 267/**2018** ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையில் 7 (VI) பிரகாரம் கட்டுநிதி சீராக்கல் கணக்குடன் ஒப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | சுற்றுநிருபம் படி கட்டுநிதி சீராக்கல் கணக்கிற்கு படிவம் காட்டப்படாமையால், அந்தக் கணக்கு தயாரிக்கப்பட-வில்லையெனவும், எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக் கூற்றுகளுடன் கட்டுநிதி சீராக்கல் கணக்கு சமர்ப்பிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |

**1.6.2** வருமானமற்ற கிடைக்கப்பெறுவனவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரின் அபிப்பிராயம் |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக நிதி செயலாற்றுகை கூற்றுபடி முற்பண "பி" கணக்கில் அமைச்சின் கிடைக்கப் பெறுவன-வைகளின்கீழ் உள்ளடக்கியிருந்த ரூபா.3,193,431 தொகை ஏனைய கிடைக்கப்-பெறுவனவைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், அந்த பெறுமதியில் வருமானமற்ற கிடைக்கப்-பெறுவனவைகளும் பலமுறை கணக்கிடப்பட்டிருந்தது. | நிதி கூற்றுகளை தயாரிக்கும்போது உரிய கொடுக்கல்வாங்கல்களை செவ்வையாக குறிக்க-ப்படுதல் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். | நிதி கூற்றுகளை தயாரிக்-கும்போது மீண்டும் இவ்வாறான தவறுகள் ஏற்படாதிருப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**1.6.3** மீண்டுவருஞ் செலவினம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் உத்தியோக-த்தரின் அபிப்பிராயம் |
| --- | --- | --- |
| 05 செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக மாதாந்த கணக்கு சாராம்சம்படி செலவுகளின் மொத்தம் மற்றும் திறைசேரி அச்சீட்டு குறிப்புகளில் காட்டப்பட்டுள்ள மீதி என்பவற்றுக்கிடையில் மொத்தம் ரூபா. 945,836 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வருடாந்த நிதிக் கூற்றுகளை தயாரிக்கும்போது ஒவ்வொரு செலவு விடயங்களுக்கு ஏற்புடையதான செலவு மீதி, திறைசேரி அச்சீட்டு குறிப்புகள் என்பவற்றுடன் ஒப்பிடப்பட்டு தேவையான சீராக்குதல்களை மேற்கொள்ளுதல் வேண்டும். | நிதிக் கூற்றுகளை தயாரிக்கும்போது மீண்டும் இவ்வாறான பிழைகள் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**1.6.4** பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரால் மேற்கொள்ள வேண்டிய சான்றுப்படுத்தல்கள்
-----------------------------------------------------------------------------------------------------------

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரால், பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுப்படுத்த வேண்டுமாயினும், அதன்படி பணியாற்றியிருக்கவில்லை.

| அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| (i) அமைச்சின் நிதி நிருவாகத்திற்கு செயற்திறனுடன்கூடிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலர் சான்றுப்படுத்த வேண்டுமென்பதுடன், முறைமையின் செயற்திறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்து, அதன்படி முறைமையை செயற்திறனாக பேணிச் செல்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும், அந்த மீளாய்வுகள் எழுத்தில் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியினை கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | உள்ளக கணக்காய்வுப் பிரிவில் நிலவுகின்ற வெற்றிடங்கள் காரணமாக உள்ளக கணக்காய்வுமூலம் நிருவாக முறைமை தொடர்பாக மதிப்பீடு செய்வதற்கு முடியாமை. மேலும் அந்தப் பிரிவினை வலுவூட்டுவதன்ஊடாக உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை செயற்திறனாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். |
| **(ii)** உள்ளக கணக்காய்வு பணிகளை உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்கு செயற்திறனுடன்கூடிய முறைமை இருப்பதாக பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலர் சான்றுப்படுத்த வேண்டுமாயினும், அறிக்கையில் 4.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் படி அந்த தேவை நிறைவேற்றப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | உள்ளக கணக்கயர்வுப் பிரிவில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் அந்தப் பிரிவை வலுவுடன் பேணிச் செல்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல். |

**1.6.5** சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| அவதானிப்பு | | | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு-விதிகளின் தொடர் | பெறுமதி (ரூபா) | இணங்கியொழுகாமை | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியர-சின் நிதி ஒழுங்கு-விதி கோவையில்<br>நிதி ஒழுங்குவிதி **104** | ---------- | i. மீளாய்விற்கான ஆண்டில் அமைச்சிற்குரிய 05 வாகனங்கள் விபத்துக்-குள்ளாகியிருந்தன. அந்த வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த மொத்த நட்டம் மற்றும் அதற்கு பொறுப்பு கூற-வேண்டியவர்கள் யார் என்பதை தீர்மானிப்பதற்கு உரிய விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. | நட்டம் அல்லது இழப்பு ஏற்பட்ட-வுடன், உடனடியாக நிதி ஒழுங்குவிதி 104(i) பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | இந்த விபத்துகள் தொடர்பான விசாரணை மேற்கொள்-ளப்பட்டு வருகிறது. |
| | | ii. பிரதி அமைச்சர் அவர்களின் பணியாற்-தொகுதியின் பொருட்டு ஒதுக்கப்பட்டிருந்த வாகனமொன்று 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருப்பி னும், கணக்காய்வு திகதியான 2019 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதியாகும்போதும் உரிய பருதுபார்த்தல்களை மேற்கொள்ளாது தனியார் வாகனகூடத்தில் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று அறிய வந்துள்ளது. இந்த விபத்துக்கு ஏற்புடையதாக நிதி ஒழுங்குவிதி பிரகாரம் தேவையான விசாரணை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இந்த விபத்து தொடர்பாக நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக அரசாங்கத்திற்கு ஏதேனும் நட்டம் ஏற்பட்டிருப்பின் அந்த நட்டத்தை எவ்வாறு ஈடுசெய்தல் வேண்டுமென்பது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தல் வேண்டும். | இந்த வாகனத்தை மிக விரைவில் பழுதுபார்ப்-பதற்கும் உரிய காப்புறுதி உரித்துகளை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்வ-தாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)2014** ஆம் ஆண்டு பெப்ருவரி 17 ஆந் திகதிய **01/2014** ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் பந்தி 3 | சுற்றறிக்கை பிரகாரம் செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை அமைச்சினால் மீளாய்விற்கான ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | உரிய சுற்றறிக்கை பிரகாரம் மற்றும் அமைச்சின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியுமானவாறு வருடாந்த செயற்றிட்டம் தயாரித்தல். | முறையான வாறு திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

**2.** நிதிசார் மீளாய்வு

**2.1** செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரது அபிப்பிராயம் |
|---|---|---|
| **ஒதுக்கீடுகளின் குறைப் பயன்பாடு**<br>08 மூலதன செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா.13,000,000 ஆன முழுமையான ஒதுக்கீடு மற்றும் 04 செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தம் ரூபா. 31,280,000 ஆன ஒதுக்கீடுகளில் ரூபா. 30,895,152 அதாவது 99 % விஞ்சியிருந்தது. | நிதி ஒழுங்குவிதி 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்ற வகையில் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | அலுவலக கட்டிடம் வேறு இடத்திற்கு கொண்டுச் செல்லும் பணி நிறைவேற்றப்படாமை மற்றும் பொருளாதார ரீதியாக பயனற்ற இயந்திர உபகரணங்களின் பொருட்டு மூலதன இயல்பிலான செலவினங்கள் உருவாகாமை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரது அபிப்பிராயம் |
| --- | --- | --- |
| அமைச்சினால் வருடாந்த செயலாற்றுகை சுட்டி தீர்மானிக்கும் பலன் (Out come) மற்றும் முழுமொத்த விளைவு (Impact) என்பவற்றுக்கு ஏற்புடையதான செயலாற்றுகை சுட்டிகளை அடையாளம் காணப்படவில்லை. அதேபோன்று நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை அடிப்படையாகக்கொண்டு இணைந்த திட்டம் (Corporate plan) அல்லது பெருந் திட்டம் (Master plan) தயாரிக்கப்படவில்லை. | அமைச்சின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் நீண்டகால, இடைக்கால மற்றும் குறுகியகால திட்டங்களை தயாரித்து அதன்படி பணியாற்ற வேண்டியுள்ளது. | முழுமொத்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதனை இலக்காகக்கொண்டு மூலோபாய திட்டம் தயாரிப்பதற்கு தற்போது தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

### 3.2 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரது அபிப்பிராயம் |
| --- | --- | --- |
| (அ)மீளாய்விற்கான ஆண்டுக்காக அமைச்சினால் தயாரிக்கப்பட் செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அதன் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு நேரடியாக விளைவுகளை ஏற்படுத்துகின்ற 05 நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிட்டவாறு நடைமுறைப்படுத்துவதற்கு இயலவில்லை. | இயல்பான அடிப்படையில் வருடாந்த செயற்றிட்டம் தயாரித்தல் மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை உரிய காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்கு முடியுமான நிகழ்ச்சித்திட்டம் தாயரிக்கப்பட வேண்டியுள்ளது. | திட்டமிட்ட நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இயலாமைக்காக பல்வேறு காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், எதிர்வருங் காலங்களில் செயற்றிட்டங்களில் இந்த நிகழ்ச்சித் திட்டங்களையும் உள்ளடக்கி நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) 03 மத்திய கிழக்கு நாடுகளுடன், ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கைகளை மீண்டும் மீளாய்வு செய்தல் அல்லது இற்றைப்படுத்துவதற்கும், இரண்டு நாடுகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைச்சாத்திடுதலும், 04 நாடுகளுடன் ஒப்பமிடப்பட்டிருந்த உடன்படிக்கைகளின்படி வருடாந்த இணைந்த குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கும், 2018 ஆம் ஆண்டு இறுதியிலும் நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தையுடன் தொடர்புடைய பல்வேறு நாடுகளுடன் மற்றும் இராஜதந்திர மட்டத்தில் உறவுகளை பேணிச் செல்வதற்கு தேவையான தலையீடு அமைச்சினால் உரியவாறு மேற்கொள்ளப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | வெளிநாட்டு வேலைவாய்பபு சந்தை மற்றும் அதனுடன் தொடர்புடைய நாடுகளுடன் சிறந்த உறவினை பேணிச்செல்லுதல், களத்திற்கு ஏற்புடையதாக உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொள்வதற்கு இலகுவாகுமென்பதால், அது தொடர்பாக முகாமைத்துவத்தின் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. | இராஜதந்திர நடவடிக்கைகளின் பொருட்டு நேரடி தலையீடு அமைச்சிற்கு மேற்கொள்ள இயலாதென்பதுடன், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு/தூதரங்கள் என்பவற்றுக்கு இது தொடர்பாக வேண்டுகோள் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.3** கருத்திட்டங்களை நிறைவேற்றுவதன் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரது அபிப்பிராயம் |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு நவம்பர் 09 ஆந் திகதிய அப/16/2048/741/011 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானப் பத்திரிக்கைமூலம் புலம்பெயர்ந்த ஊழியர்களின் பொருட்டு ஓய்வூதிய முறை ஆரம்பிக்கப்படுவதற்கு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பினும், 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியிலும் இந்த முறை வரையுள் மட்டத்தில் இருந்தது. | இந்த ஓய்வூதிய முறையை துரிதமாக நடைமுறைப்படுத்துவதன்மீது முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். | சட்ட வரையுள் திணைக்களத்தால் இறுதி வரையுள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3.4 நிதி விடுவிக்கப்பட்டிருப்பினும் முன்னேற்றம் அடையாதிருந்த கருத்திட்டங்கள்

----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரது அபிப்பிராயம் |
|---|---|---|
| (அ)வெளிநாடு வேலைவாய்ப்புகளின் பொருட்டு சென்றுள்ள தொழிலாளர்களின் குடும்பங்களின் தகவல்களை கணினிமயப்படுத்தி தரவு முறைமை பேணிச் செல்வதற்கும், இற்றைப்படுத்திய தகவல்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடம் கணனியுடன் நேரடித் தொடர்பு (Online) முறைமைமூலம் அனுப்புவதை நோக்கமாகக் கொண்டு அமைச்சினால் பிரதேச செயலகங்களின் பொருட்டு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 277 கணினிகளை ரூபா.35,500,959 ஐ செலவிடப்பட்டு கொள்வனவு செய்து பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. ஆயினும் எதிர்பார்த்தவாறு தரவு முறைமை பேணிக்கொண்டு தேவையான தகவல்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடம் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்துவதன் நோக்கம், நிறைவேற்றப்பட வேண்டிய காலம், மொத்த செலவு மற்றும் நடைமுறைப்படுத்தும் முறைமை உள்ளடக்கிய முழு மொத்த திட்டத்தின்மீது நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன்மீது கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். | சர்வதேச தொழில் அமைப்பின் நிதி உதவியுடன், தரவு முறைமை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதெனவும், அந்த முறைமையினை நடைமுறைப்படுத்தும் வரை பிரதேச செயலக மட்டத்தில் தகவல்களை பேணிச் செல்வதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (**ஆ**)வெளிநாடு சென்றுள்ள தொழிலாளர்கள் தொடர்பான தகவல்களை குறுஞ் செய்திகள் மூலமாக அபிவிருத்தி அலுவலர்களிடம் வழங்கும் முறையொன்றை பணியகத்தால் நடைமுறைப்படுத்தியிருப்பினும், மீளாய்விற்கான ஆண்டில் இந்த முறை செயலற்றிருந்த படியால் வெளிநாடு சென்றவர்களின் குடும்பங்கள் தொடர்பான பின்னாய்வு நடவடிக்கைகளுக்கு நடையாக இருந்தது. | வெளிக்களத்தில் கடமைகளை மேற்கொள்கின்ற எல்லா நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கிடையில் தேவையான தகவல்களை பரிமாற்றிக் கொள்வதற்கு முடியுமான தகவல் முறைமையினை தாபித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். | இந்த ஆண்டு செப்தெம்பர் மாதத்தில் தரவு முறைமையின் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.5 ஏனைய அவதானிப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரது அபிப்பிராயம் |
|---|---|---|
| அமைச்சினால் பிரதேச ரீதியாக சேவையில் ஈடுபடுத்திய 914 அபிவிருத்தி அலுவலர்களுக்கு ஏற்புயைடதாக இணைக்கப்படுதலுடன் தொடர்புடைய பிரச்சினைகள் உள்ளமை, கடமை பொருட்டான நடவடிக்கைகளை நிறைவேற்றுவறத்கு தேவையான வழிகாட்டல்களை மேற்கொள்ளுதல் மற்றும் மேற்பார்வை உரியவாறு மேற்கொள்ளாமை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் கூட்டிணைத்தல் பலவீனமாக நிலையில் இருத்தல், முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை உரியவாறு நடாத்தாமை போன்ற காரணங்களினால் அந்த அலுவலர்களிடம் எதிர் பார்க்கப்பட்ட கடமைப் பொறுப்பு உரியவாறு நிறைவேற்றப்படவில்லையென அவதானிக்கப்படுகிறது. | அமைச்சின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக இவ்வலுவலர்களிடம் ஆகக் கூடிய பங்களிப்பை பெற்றுக்கொள்ள கூடிய வகையில் நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். | இந்த அலுவலர்களை முறையானவாறு மேற்பார்வை செய்யக் கூடிய வகையிலான நிகழ்ச்சித் திட்டம் தற்போது நடைமுறைப்படுகின்றது. |

## 3.6 வெளிநாட்டு நன்கொடை கருத்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரது அபிப்பிராயம் |
|---|---|---|
| இலங்கையில் வெளிநாடு சென்றுள்ள தொழிலாளர்கள், அவர்களின் குடும்பங்களின் பாதுகாப்பு மற்றும் சுபீட்சம்மீது பங்களிப்பு வழங்கும் நோக்கத்தில் சுவீட்சர்லாந்து அரசாங்கத்திடம் ஒழுங்குமுறையில் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களுக்கு 699,414 அமெரிக்க டொலர் மற்றும் 3,875,000 அமெரிக்க டொலர் நன்கொடை மீது 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை “சிரம விகமன” நிகழ்ச்சித் திட்டம் ஓர் அரசு சாராத நிறுவனம் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. | இந்த நிகழ்ச்சித் திட்டம் அமைச்சின் கண்காணிப்பின்கீழ் நடைமுறைப்படுத்துவதன் மீது முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். | அரச கணக்கு குழுவின் பரிந்துரைக்கமைவாக இது தொடர்பாக அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளதுடன், அது தொடர்பான விடயங்களை கவனத்தில் கொள்வதாக அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

அதேபோன்று கருத்திட்டங்களின் கிரயம், நிதியத்தின் பங்களிப்பு, நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் அல்லது கருத்திட்டம் நடைமுறைப்படும் முறை தொடர்பாக இணக்கப்பாடு இன்றி 2020 ஆண்டு வரை நடைமுறைப்படும் அதன் மூன்றாவது கட்டத்தை ஒழுங்குபடுத்தல் அதிகாரம் அமைச்சிற்குரியதாக இருப்பினும், அந்த நடவடிக்கை உரியவாறு மேற்கொள்ளாமை காரணமாக அதன் நிதிசார் மற்றும் தொழில்பாட்டு நடவடிக்கைகள் அரசாங்கத்தின் நிருவாகமின்றி மேற்கொள்ளப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

**3.7** முகாமைத்துவ குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரது அபிப்பிராயம் |
|---|---|---|
| 2017 சனவரி 16 ஆந் திகதிய 2017/01 ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு சுற்றுநிருபத்தின் 19 ஆவது பந்தி பிரகாரம் நியமனம் செய்யப்பட்ட மேன்முறையீட்டு குழு உரிய கவனத்துடன் நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக தொழில்களின் பொருட்டு வெளிநாடு சென்ற ஒரு பெண் ஊழியரின் பிள்ளைகள் கடும் உடல் உள பாதிப்புக்குள்ளாகியிருத்தல் மற்றும் பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பாக பிரச்சினைகளுடன்கூடிய நிலைமைகள் இருந்த 07 சந்தர்ப்பங்களில், பிரதேச செயலகங்களின் பரிந்துரைகளை கவனத்தில் கொள்ளாது குடும்ப பின்னணி அறிக்கைகள் வழங்கியிருந்தமை மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் அறியவந்துள்ளது. | குழந்தைகள் உள்ள பெண்கள் வெளிநாடு வேலைவாய்ப்புகளின் பொருட்டு செல்வதற்கு அனுமதி வழங்குகையில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பொறுப்புடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், இவ்வாறான நிகழ்வுகள் மீண்டும் ஏற்படாதிருப்பதற்கு கவனயீனமாக பணியாற்றிய அலுவலர்கள் தொடர்பில் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | இது தொடர்பாக விசாரணை நடாத்தப்படவில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று இவ்வாறான குறைப்பாடுகளை குறைத்துக்கொள்வதற்கு தேவையான நிகழ்ச்சித் திட்டமொன்றை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

4. நள்ளாளுகை

4.1 உள்ளக கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரது அபிப்பிராயம் |
| --- | --- | --- |
| (அ) பிரதான உள்ளக கணக்காய்வு பதவி 2018 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி தொடக்கம் கணக்காய்வு திகதியான 2019 ஆம் ஆண்டு மே மாதம் 08 அந் திகதி வரை வெற்றிடமாக நிலவியது. | 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 30 ஆவது பிரிவு பிரகாரம் பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரால் பொருத்தமான கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவி பொருட்டு அலுவலர் ஒருவரை நியமனம் செய்யும்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) உள்ளக கணக்காய்வுப் பிரிவிடம் ஆண்டுக்குள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 30 முறைப்பாடுகளில் கணக்காய்வு திகதியான 2019 ஆம் ஆண்டு 10 அந் திகதியில் 25 முறைப்பாடுகளின் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | முறைப்பாடுகளின் பொருட்டு தாமதமின்றி புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். | புலனாய்வு நடவடிக்கைகளின் பொருட்டு பயிற்சி பெற்ற அலுவலர்களை அப் பிரிவிடம் இணைப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

**05.** மனித வளங்களின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரது அபிப்பிராயம் |
| --- | --- | --- |
| மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் அமைச்சின் நிறைவேற்று மட்டத்திலான 11 பதவிகளில் 04 பதவிகள் வெற்றிடமாக இருந்தன. அதேபோன்று அபிவிருத்தி உதவியாளர் 06 பதவிகளில் ஒரு அலுவலரேனும் ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை. | இந்த நிலைமை அமைச்சின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு தடையாக இருந்தபடியால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள-தெனவும் அபிவிருத்தி உதவியாளர் பதவிகளை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலிருந்து நீக்கப்பட்டு அதன் பொருட்டு அபிவிருத்தி அலுவலர்களை சேவையில் ஈடுபடுத்து-வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொ-ள்ளப்பட்டு வருகின்றது. |